# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.188/மா/2023

நாள்.27.12.2023

திரு.மயில்சாமி,
மதுரை – முறையீட்டு மனுதாரர்

செயற்பொறியாளர்(திட்டம்)
மதுரை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 30.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2023 அன்று பெறப்பட்டு, 188/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 30.05.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) கதவு எண். 4/126 C மாட்டுதாவணி மெயின்ரோடு மதுரை 7 என்ற முகவரியில் லாவிவாண்டா தங்கும் விடுதி (Lodge) இயங்கி வருகிறது. இவ்விடுதியானது நான்கு மாடி கட்டிடங்களைக்கொண்டுள்ளது. லாவிவாண்டா தங்கும் விடுதிக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு (parking space) இடம் இல்லை. இடம் இல்லாததால் இந்த லாட்ஜ்க்கு முன்பாக உள்ள சாத்தையார் ஓடையை (பெரிய ஓடை) சுமார் 25 அடிக்கும் மேலாக ஆக்கிரமிப்பு செய்து ஓடையில் தூண்கள் (pillar) எழுப்பி அதன் மேல்பரப்பில் கான்கிரீட் போட்டு வாகனங்கள் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி சாத்தையார் ஓடையை ஆக்கிரமிப்பு

செய்து சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் மேற்படி லாவிவாண்டா தங்கும் விடுதியை கண்டும் காணாமல் இருந்துவரும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும் ஆக்கிரமிப்பு செய்துள்ள ஓடையை முழுமையாக அளந்து அகற்றியும் (remove) வாகன நிறுத்துவதற்கு (parking space) இல்லாமல் இயங்கி வரும் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ள லாவிவாண்டா தங்கும் விடுதியை தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன்படியும் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and seal/demolition notice வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளரிடம்(திட்டம்) கோரப்பட்டது.**

**3) மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) தனது 19.07.2023 நாளிட்ட அறிக்கையிலும் மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் தனது 14.12.2023 நாளிட்ட அறிக்கையிலும் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்:**

" மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு உள்ளூர் திட்டக்குழுமத்தில் திட்ட அனுமதி எண்.21/2015, நாள் 08.04.2015 அன்று அனுமதி பெறப்பட்டு கட்டிட அனுமதி மதி2/345/2015, நாள் 29.04.2015ல் வழங்கப்பட்டுள்ளது.

| அனுமதி பெறப்பட்டுள்ளது. | |
|---|---|
| Block A-ல் | 1006.52 ச.மீ. |
| Block B-ல் | 1464.40 ச.மீ. |
| மொத்தம் | 2470.92 ச.மீ. |

தற்போது நிலையில் உள்ள கட்டிடம் நேராய்வு செய்து கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 296(1) & (2)ன் கீழ் இடத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தற்போது நிலையில் உள்ள கட்டிடத்திற்கு மேல்முறையீட்டு விண்ணப்பம் ஏதும் சமர்ப்பித்துள்ளாரா என விளக்கம் அளிக்காவிடில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 04.12.2023 அன்று தென்காசி மாவட்டம், குற்றாலம் சர்க்யூட் ஹவுஸில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 04.12.2023 அன்று பெய்த பெருமழையின் காரணமாக அன்றைய விசாரணை நடைபெறவில்லை. பின்னர் 12.12.2023 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 18.12.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது.**

6) மனுதாரர் 18.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி மண்டலம்–1 (கிழக்கு) கதவு எண்.4/126 சி மாட்டுத்தாவணி மெயின் ரோடில் இயங்கிவரும் லாவிவாண்டா தங்கும் விடுதி அனுமதிக்கு மாறாகவும் விதிகளை மீறியும் கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதாவது 2470 சதுர மீட்டருக்கு அனுமதி பெற்று, சுமார் 5000 சதுர மீட்டர் அளவுக்கு கட்டடம் கட்டியுள்ளனர். மேற்கண்ட விடுதி வாகனம் நிறுத்துவதற்கான போதிய வாகன நிறுத்த இட வசதி இல்லை. வாகன நிறுத்த இடவசதி இல்லாததால், அங்குள்ள சாத்தையார் ஓடையை ஆக்கிரமித்து தூண்கள் எழுப்பி அதில் கான்கிரீட் போடப்பட்டு, அதன் மீது வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. அரசாணை (நிலை) எண் 111 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 22.06.2017ன்படி ஓடையிலிருந்து (நதி) 15 மீட்டர் இடம் விடப்பட்டு மேற்கண்ட விடுதிக்கட்டடம் கட்டப்படவில்லை. மேற்கண்ட விடுதியின் நான்கு புறத்திலும் போதிய இடம் (set back) விடப்படவில்லை. அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டடம் கட்டியும், நீர்நிலையின் மீது பார்க்கிங் வசதி செய்துள்ள மேற்கண்ட விடுதியின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழும், அரசாணை(நிலை) எண் 07 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும் சட்டப்படி நடவடிக்கை எடுத்திடவும், மேற்படி விடுதியை முழுவதுமாக அளவீடு செய்து சொத்துவரியை முறையாக வசூலிக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) 18.12.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன் கீழ் அனுமதியற்ற மற்றும் விதி மீறல் கட்டடங்களுக்கு அறிவிப்பு சார்பு செய்ய மண்டல உதவி ஆணையர்களுக்கு அதிகாரப்பகிர்வு மாநகராட்சி ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. எனவே அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ள லாவிவாண்டா கட்டிடத்திற்கு உதவி ஆணையர் மண்டலம் 01 மதுரை மாநகராட்சி மூலமாக Lock and seal தொடர்பான அறிவிப்பு வழங்கி மேல்நடவடிக்கை தொடரப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) கதவு எண் 4/126C, மாட்டுத்தாவணி மெயின்ரோடில் இயங்கி வரும் லாவிவாண்டா தங்கும் விடுதி அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும், இவ்விடுதியில் வாகனம் நிறுத்த இடவசதி செய்யப்படவில்லையெனவும், மேலும் சாத்தையார் ஓடையை 25 அடி வரையில் ஆக்கிரமித்து கான்கிரீட் அமைத்து அதில் வாகனகங்கள் நிறுத்தப்பட்டு வருவதாகவும், எனவே சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டிடம்

கட்டப்பட்டதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும், ஓடையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களை அகற்ற கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு உள்ளூர் திட்டக்குழுமத்தில் அனுமதி 8.4.2015 அன்று பெறப்பட்டுள்ளது என்றும், கட்டிட அனுமதி 29.4.2015 அன்று பெறப்பட்டுள்ளது என்றும், தற்போது நிலையில் உள்ள கட்டிடம் நேராய்வு செய்து கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 296(1) மற்றும் 2ன் கீழ் கட்டிடத்தின் உரிமையாளருக்கு அறிவுப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், உரிமையாளர் மேல்முறையீட்டு விண்ணப்பம் ஏதும் சமர்ப்பித்துள்ளாரா என விளக்கம் அளிக்காவிடில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன் கீழ் அனுமதியற்ற மற்றும் விதி மீறல் கட்டிங்களுக்கு அறிவிப்பு சார்பு செய்ய மண்டல உதவி ஆணையர்களுக்கு அதிகாரப்பகிர்வு மாநகராட்சி ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ள லாவிவாண்டா கட்டிடத்திற்கு உதவி ஆணையர் மண்டலம் 1 ன் மூலமாக Lock and Seal தொடர்பான அறிவிப்பு வழங்கி மேல்நடவடிக்கை தொடரப்படும் என்றும் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் தன்னுடைய அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட லாவிவாண்டா தங்கும் விடுதிக்கு 2470.92 சதுர மீட்டருக்கு திட்ட அனுமதி 8.4.2015 அன்றும் கட்டிட அனுமதி 29.4.2015 அன்றும் வழங்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட தங்கும் விடுதி உரிமையாளர் அனுமதிக்கு மாறாக 5038.35 சதுர மீட்டர் அதாவது 50 சதவீதம் கூடுதலாக கட்டிடம் கட்டிய நிலையிலும், சாத்தையார் ஓடையை ஆக்கிரமித்து கான்கிரீட் போட்டு வாகனங்கள் நிறுத்தப்படுவதை மதுரை மாநகராட்சி மண்டலம் 1 ன் கள அலுவலர்களோ அல்லது புகார் மனு பெறப்பட்டவுடன் மண்டல உதவி ஆணையரோ கள ஆய்வு செய்யாமல் மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு 30.5.2023 அன்று புகார் மனு அளித்தபின்பு மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு மதுரை மாநகராட்சி சட்டம் பிரிவு 296(1) மற்றும் (2)ன் கீழ் அறிவுப்பு சார்பு செய்யப்பட்டதற்கு மாநகராட்சி மண்டலம் 1ன் அலுவலர்கள் விதிமீறி கட்டப்பட்ட கட்டிட உரிமையாளருக்கு அப்பட்டமாகவும், சாதகமாகவும், உடந்தையாகவும் இருந்துள்ளனர் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. இது மிகவும் தூரதிருஷ்டவசமானது மட்டுமல்ல தங்களுடைய கடமையை சரிவர செய்யதாதது அவமானகரமானது என்று இம்முறைமன்றம் சுட்டிகாட்ட விரும்புகிறது. மேலும், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து Town and Country Planning Act 1971ன்படி நடவடிக்கை எடுக்காமல் மதுரை மாநகராட்சி சட்டம் 1971ன்படி நடவடிக்கை எடுத்து இருப்பது ஏற்புடையது அல்ல. எனவே மதுரை மாநகராட்சியின் செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் அறிக்கையை இம்முறைமன்றம் நிராகரிக்கிறது.

மேலும், இம்மாதிரியான அனுமதியின்றி கட்டிடம் மற்றும் கூடுதலாக கட்டப்படும் கட்டிடங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசாணை (நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ல் அமலாக்க நடவடிக்கை விதிகள் மற்றும் அறிவிப்பு படிவங்களை வெளியிட்டுள்ளது. அவ்வாணையில் மற்றவற்றிக்கிடையில் (among others)

" The Government issue the following guidelines to the Tamil Nadu Town and Country Planning (Removal of Unauthorised Development) Rules 2022 to streamline the

enforcement action on unauthorized developments under section 56 and 57 of Tamil Nadu Town and Country Planning Act. 1971:-

**Procedures/Guidelines to be followed:**

**1. Is there a need to call for records from the individual?**

(1) Hon'ble High Court of Madras in its order dated 02.11.2022 in W.P.No.28929 of 2022 and W.M.P.No.28223 of 2022 filed by Thiru A.P. Ravi has observed as below:

> *"in several cases notices are being issued requiring the alleged violators to produce the sanctioned plan. It is quite surprising that the Enforcement Authority, which is the plan sanctioning Authority also, seeks copy of the sanctioned plan from the violator concerned. We do not find any legal provision under the Town and Country Planning Act supporting such a notice. It is also found that time is granted for production of sanctioned plan and thereafter a notice is issued requiring the violator to bring the development in conformity with the sanctioned plan and on failure to bring it into conformity, lock and seal notice is issued. This procedure is not contemplated under the Town and Country Planning Act."*

(ii) Since the issue of notice calling approved plan is not contemplated under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 as observed by the Hon'ble High Court, the authority concerned should confirm from its database on whether any approval has been issued for building in the site. If the same is confirmed then the enforcing authority shall retrieve the copy of approved plan from its records and the authorized official shall carry the same for site inspection.

(iii) In cases where the database does not indicate any approval granted or copy of approved plan is not available with the enforcing authority, the principles of natural justice require an opportunity to be given to the building owner to produce the records including approved plan, if any available with them. In such cases, the notice in Form-I shall be issued by giving at least 3 days time to produce the documents.

After issuance of notice in Form-I calling for records from the individuals and on receipt of records/non-receipt of the records within stipulated time, inspection should be made by the authorized officer for which notice of inspection in Form-II should be issued.

Xxxxx

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையில்:-

"மேற்காணும் அரசாணையில் (அரசாணை (நிலை) எண் 195, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 05.11.2022)வெளியிடப்பட்டுள்ள விதிகளை பின்பற்றியும் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வுகளுக்குட்பட்டு அனுமதியற்ற அல்லது அனுமதிக்கு மாறாக கட்டப்படும் கட்டுமானங்கள் மற்றும் அபிவிருத்திகள் மீது அமலாக்க நடவடிக்கைகளை கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அனைத்து ஆணையாளர்களுக்கும், நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."

இந்நேர்வில் மேற்கண்ட அரசாணை மற்றும் சுற்றறிக்கை ஆகியவை பின்பற்றப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் இவ்வரசாணை மற்றும் சுற்றறிக்கைப்பற்றிய விழிப்புணர்வு மதுரை மாநகராட்சி மண்டலம் 1ன் அலுவலர்களுக்கு இல்லை என்றும் இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

2014 ஆண்டை தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவிகளில் குறிப்பாக

<u>பிரிவு 7</u> The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

<u>பிரிவு: 12</u>(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட லாவிவாண்டா தங்கும் விடுதிக்கு 2470.92 சதுர மீட்டருக்கு திட்ட அனுமதி 8.4.2015 அன்றும் கட்டிட அனுமதி 29.4.2015 அன்றும் வழங்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட தங்கும் விடுதி உரிமையாளர் அனுமதிக்கு மாறாக 5038.35 சதுர மீட்டருக்கு அதாவது 50 சதவீதம் கூடுதலாக கட்டிடம் கட்டிய நிலையிலும், சாத்தையார் ஓடையை ஆக்கிரமித்து கான்கிரீட் போட்டு வாகனங்கள் நிறுத்தப்படுவதை மதுரை மாநகராட்சி மண்டலம் 1ன் கள அலுவலர்களோ அல்லது புகார் மனு பெறப்பட்டவுடன் மண்டல உதவி ஆணையரோ கள ஆய்வு செய்யாமல் மெத்தனமாகவும், விதிமீறல்

கட்டிட உரிமையாளருக்கு உடந்தையாக இருந்தது தெரியவருகிறது என்ற காரணத்தினாலும், தமிழ்நாடு நகர்புற ஊரமைப்புச் சட்டம் 1971ன்கீழ் உரிய நடவடிக்கை எடுக்காதாலும், மற்றும் அரசாணை (நிலை) எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ல் தெரிவித்துள்ள அமலாக்க நடவடிக்கையை பின்பற்றாமல் இருந்தது மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநகரம் வெளியிட்டுள்ள 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையை பின்பற்றமால் இருந்த மதுரை மாநகராட்சி மண்டலம்-1ன் சம்பந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் உச்சநீதிமன்றமும், சென்னை உயர்நீதிமன்றமும் நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்து அதிருப்தி தெரிவித்து வரும் நிலையில், நீர்நிலை மீதான ஆக்கிரமிப்பு எவ்வித ஆக்கிரமிப்பும் ஏற்க இயலாது என்பதால், சாத்தையார் ஓடையில் ஆக்கிரமிப்பு இருப்பின் அரசாணை (நிலை) எண்.186 வருவாய்(நமு1 (2) ) நாள் 20.04.2008-ல் ஆணையிட்டவாறு சம்பந்தப்பட்ட அரசுத்துறையுடன் இணைந்து உடனடியாக ஆக்கிரமிப்பினை அகற்ற உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது. மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 30 தினங்களுக்கு அனுப்பிவைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R.மயில்சாமி,
த/பெ. திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் நகர்,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை-625 002.

3) செயற்பொறியாளர்(திட்டம்)
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை – 625 002.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) மாவட்ட ஆட்சியர்,
மதுரை மாவட்டம்,
ஆட்சியர் அலுவலக சாலை,
ஆழ்வார்புரம்,
மதுரை–625 020. – உரிய நடவடிக்கைக்காக

6) உதவி ஆணையர் (ஆணையர் வழியாக)
மண்டலம் –01 (கிழக்கு)
மதுரை மாநகராட்சி,
மதுரை–625 017.

7) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்